விதி 110-ன் கீழ் அறிக்கை 18/4/07

நேற்று 17–4–2007 இரவு சுமார் 11 மணி அளவில் விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலைய சரகம், முண்டியம்பாக்கம் சுடு காட்டில் உள்ள முண்டியம்பாக்கம் வள்ளியம்மை கோவில் தெருவில் இருக்கும் அங்காளம்மன் கோவிலுக்கு வழக்கமாக ஒவ்வொரு அமாவாசை அன்றும் சுடுகாட்டில் கரகம் ஜோடித்து எடுத்து வந்து அங்காளம்மனுக்குப் படைப்பது போல – நேற்றும் சுடுகாட்டில் கரகம் ஜோடித்துக் கொண்டிருந்த போது – இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்தும், திடீரென்று மின்னலுடன் கூடிய இடி தென்மேற்கு திசையில் பக்கவாட்டில் சுடுகாட்டுக் கொட்டடைக்குள் விழுந்ததில் – அந்தக் கொட்டகைக்குள் கரகம் ஜோடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது அந்த இடி தாக்கி, அதில் எட்டு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் ஐந்து பேர் காயமடைந்து விழுப்புரம் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் இறந்தவர்கள் விவரம் வருமாறு :–

1. பெருமாள் உடையார் மகன் 32 வயதான வீரவேல் முருகன்
2. விஜயபாலன் மகன் 32 வயதான கோபி சுதாகர்
3. வெள்ளிக்கண்ணு மகன் 55 வயதான கலியமூர்த்தி
4. பெருமாள் மகன் 27 வயதான இராசேந்திரன்
5. அண்ணாமலை மகன் 47 வயதான மோகன்
6. பிச்சைக்காரன் என்பவரின் மகன் 28 வயதான பரமசிவம்
7. முருகேச கவுண்டர் மகன் 55 வயதான காசிநாதன்
8. பூங்காவனம் என்பவரின் மகன் 20 வயதான வீரக்குமார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விவரம் வருமாறு :—

1. காசி என்பவரின் மகன் 11 வயதான கார்த்தி

2. கருப்பன் மகன் 35 வயதான கெங்காதுரை

3. ரெங்கநாதன் மகன் 31 வயதான தேஜப்பன்

4. கருப்பன் மகன் 43 வயதான கண்ணன்

5. அங்கப்பன் உடையார் மகன் 28 வயதான மேகராஜன்

சம்பவம் பற்றிய நிகழ்ச்சி இன்று காலையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டவுடன் அந்த மாவட்ட அமைச்சரான உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி அவர்களையும், சட்ட மன்ற உறுப்பினர்கள் புஷ்பராஜ், கண்ணன் ஆகியோரையும் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரிகள் ஆகியோரை சம்பவம் நடந்த இடத்திற்கு அனுப்பி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லியிருக்கிறார்.

உடனடியாக இறந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ஐம்பதாயிரம் ரூபாயும், விபத்து நிவாரண நிதியிலிருந்து தலா ஐம்பதாயிரம் ரூபாயும் ஆக மொத்தம் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் அமைச்சர் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. காயம் அடைந்தவர்களுக்கும் அவரவர்களின் காயத்திற்கு தகுந்தாற்போல், மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்வதை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு
இயக்குநர்
செ.ம.தொ.து
சென்னை-9